(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | CC.No.495/2022 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 5

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரியராஜ்குமார் |
| த/பெ | : | தங்கதுரைராஜ் |
| கிராமம் | : | வடலிவிளை |
| வட்டம் | : | கல்குளம் |
| சாதி | : | பி.சி |
| அழைத்தல் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| மதம் | : | கிறிஸ்தவர் |
| வயது | : | 36 |

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

2023ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாளன்று, 1969ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது திசையன்விளை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். காவல் நிலைய குற்ற எண்.253/2020 இதச சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(2)–ன் கீழ் வழக்கின் உள்ள முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மற்றும் புலன்விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் மகேஷ்வரி அவர்கள் வேறு காவல்நிலையத்தில் பணி புரிவதால் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதாலும்,

அவர்கள் சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 27.08.2020–ம் 18.00 மணிக்கு திசையன்விளை காவல் நிலைய உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது திசையன்விளை செல்வமருதூரை சேர்ந்த ராஜ்நாடார் மகன் ஐசக் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்றுள்ளார். **புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.253/2020 இதச சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(2) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலை புகார் வாக்குமூலத்தை இணைத்து கனம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணை அதிகாரி அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார்.

3) விசாரணை அதிகாரி வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு 28.08.2020ம் தேதி 21.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜ்குமார், மாலா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பார்வைமகஜர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4) பின்னர் சாட்சிகள் 1 முதல் 8 மற்றும் வழக்கு பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தொடர்ந்து தேடி வந்த நிலையில் எதிரி திருநெல்வேலி, மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று சென்றுவிட்டார். 06–09–2020ம் அன்று மாலை 5.00 மணிக்கு வழக்கிடை சொத்தான TN 67 A7 2054 என்ற மாருதி ஆமினி வாகனத்தை சாட்சிகள் ஜோன்ஸ் பாலன், லிங்கராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார்.

**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆக குறியிடு செய்யப்படுகிறது.** வழக்கு சொத்தை நீதிமன்ற காவலுக்கு படிவம் 91 மூலம் உட்படுத்தியுள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5) காயம் பட்ட சாட்சி ஐசக் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.பொன்மதன்குமார் என்பவரை விசாரணை செய்து காய சான்று பெற்றுள்ளார். மருத்துவர் சாதாரண காயம் என்று சான்று அளித்துள்ளார். **காயசான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. விசாரணை அதிகாரி வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) கீழ் குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

1) நான் சொன்ன தேதியிலும், சொன்ன நேரத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வில்லை என்றாலும், வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை நேரில் விசாரிக்கவில்லை என்றாலும், இந்த விசாரணை ஒருதலைபட்சமானது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.